## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் (சபை) மற்றும் அதன் துணைக் கம்பனியில் அடங்கிய தொகுதியின் ("தொகுதி") 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, அகழ்விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் மற்றும் அதன் துணைக் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின், 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, சபையின் மற்றும் தொகுதியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.ள.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும்

முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபையிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்கள்

1.5.1 தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை

1.5.1.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பந்தி 32 இன் படி நியமத்தின் மூலம் இடமளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் தவிர சொத்துக்கள் பொறுப்புகள், வருமானங்கள் மற்றும் செலவு மீதிகளை எதிரீடு செய்து நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கக்கூடாது எனினும், சபையினால் ரூபா 11,672,548 இற்கான நிதிச் செலவுகளுக்கு எதிராக ரூபா 23,918,827 தொகைக்கான நிதி வருமானங்களை பதிவழித்து தேறிய நிதிச் செலவு என ரூபா 12,246,279 தொகை வருமானங்கள் மற்றும் செலவுக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | சபையின் நிதிக்கூற்றுக்களில் நிதிச் செலவுகளுக்கு நிதி வருமானம் பதிவழித்தல் ஒன்று மேற்கொண்டிருக்காததுடன், வருமானக்கூற்றின் முன்பக்கத்தில் நிதிச் செலவுகள் மற்றும் நிதி வருமானங்கள் இடையே தேறிய பெறுமதியை காட்டி 07 ஆம் இலக்க குறிப்பு இடப்பட்டுள்ளதுடன், அந்தக் குறிப்பின் கீழ் நிதி வருமானங்கள் மற்றும் நிதிச் செலவுகள் வெவ்வேறாக சித்தரிதத்துக் காட்டப்பட்டுள்ளது. கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு 2023 ஆண்டு முதல் சமர்ப்பிக்கின்றேன். | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் படி ஒவ்வொரு மீதிகளும் எதிரீடு செய்யக் கூடாது. |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 12 இன் பந்திகள் 15 மற்றும் 16 இன் படி சபையினால் தற்காலிகமாக அறவீடு செய்யக்கூடிய வரி மாற்றங்களை கவனத்தில் எடுத்து மீளாய்வாண்டிற்காக பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆண்டு முதல் சபையினால் தற்காலிகமாக அறவீடு செய்யக்கூடிய வரிச் சொத்துக்களை கவனத்தில் எடுத்து பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் உரிய சீராக்கல் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன். | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் படி வரி வித்தியாசங்கள் சீராக்கல் செய்யப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் பந்திகள் 50 மற்றும் 51 இன் படி பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களின் ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு ஆக்கபூர்வமான ஆயுட்காலம் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் மதிப்பீட்டு வித்தியாசங்கள் என கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், ரூபா 428,821,164 தொகை கிரயத்தையுடைய முழுமையாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்த நிலையான சொத்துக்கள் சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்த போதிலும், | நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீட்டிற்காக பாரிய செலவொன்று மேற்கொள்ள நேரிடுவதுடன், நிலவுகின்ற நிதி நெருக்கடி காரணமாக இந்த நிதியாண்டில் மீள்மதிப்பீடு செய்வதற்கு முடியாமல் போனது. நிதி நிலைமை சீரடைந்ததுடன், குறிப்பிட்ட மீள்மதிப்பீடு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் படி சொத்துக்களின் ஆக்கபூர்வமான ஆயுட் காலம் மீளாய்வு செய்யப்பட்டு வெளிப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவற்றின் பயன்தரு ஆயுட் காலம் மீளாய்வு மற்றும் உரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொண்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 41 இன் பந்தி 5(அ) இன் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான ரூபா 2,379,113 தொகை பெறுமதியான தேக்கு மற்றும் மகோகனி பயிர் செய்கைகளின் நுகர்வு இனவிருத்திச் சொத்துக்கள் என வகைப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், இயலளவு இனவிருத்திச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு அறிக்கையுடன் இணங்குகின்றேன். சரி செய்தல் 2025 ஆண்டு முதல் மேற்கொள்வேன். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் படி சொத்துக்கள் சரியாக வகைப்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 41 இன் பந்தி 50 இன் பிரகாரம் வருட ஆரம்பத்தில் மற்றும் இறுதியிடையே இனவிருத்திச் சொத்துக்களின் பெறுமதி மாற்றமடைதல் தொடர்பாக இணக்கக் கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், நியாயமான பெறுமதி மாற்றமடைதல் மீது ஏற்படுகின்ற இலாப நட்டங்கள், கொள்வனவு செய்த காரணத்தினால் ஏற்படுகின்ற அதிகரிப்புக்கள், சொத்துக்கள் விற்பனை அல்லது அப்புறப்படுத்தல் மீது ஏற்படுகின்ற குறைவடைதல் ஆகியன வெவ்வேறாக சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு வெவ்வேறாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இனவிருத்திச் சொத்துக்களின் பெறுமதி மாற்றமடைதல் தொடர்பாக நிதிக்கூற்றுத் தொகுதியில் குறிப்பு இலக்கம் 11.2.1 இல் காட்டப்பட்டுள்ளதுடன், அதற்கு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேவையான ஏனைய தகவல்களை உட்படுத்தி 2023 ஆண்டு முதல் சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கின்றேன். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் இனவிருத்திச் சொத்துக்களின் பெறுமதி மாற்றமடைதல் தொடர்பாக இணக்கக்கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையிடம் காணப்பட்ட ரூபா 1,016,126,771 தொகைக்கான தென்னை பயிர்ச் செய்கையும் ரூபா 1,961,831 தொகைக்கான மரமுந்திரிகை பயிர்ச் செய்கையும், ரூபா 38,142,373 தொகைக்கான இறப்பர் பயிர்ச் செய்கையும் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 41 இன் 45 ஆம் பந்தியின் பிரகாரம் முதிர்ந்த மற்றும் முதிர்வடையாத என வெவ்வேறாக இனங்கண்டிருக்காததுடன், இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பிரகாரம் மரமுந்திரிகை மற்றும் இறப்பர் பயிர்ச் செய்கைக்காக அதற்குரிய பெறுமானத் தேய்வு சீராக்கல்களும் மேற்கொண்டிருக்கவில்லை. | கணக்காய்வு அறிக்கையுடன் இணங்குகின்றேன். சரி செய்வதற்கு 2024 ஆண்டு முதல் மேற்கொள்கின்றேன். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் மரமுந்திரிகை மற்றும் இறப்பர் பயிர்ச் செய்கைக்காக பெறுமானத் தேய்வு சீராக்கல்கள் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 07 இன் 14 பந்தியின் படி சொத்துக்களை பிணையாக வைத்து பெற்றுக்கொள்ளப்படும் கடன் தொடர்பாக நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டில் அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 162,500,000 தொகைக்கான கடன் தொடர்பாக வெளிப்படுத்தியிருக்கவில்லை. | 2023 ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்கின்றேன். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஏ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 09 இல் பந்தி 5.5.15 இன் பிரகாரம் வியாபார கடன்பட்டோர் மீதியாகிய ரூபா 193,335,673 தொகைக்காக பிற்காலத்திற்கான சேதத் தடுத்தலை கண்டறிதலுக்கான அளவீட்டிற்காக எதிர்பார்த்த கடன் நட்ட முறைமை (Expected Credit Loss Method) பயன்படுத்த வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு கணிக்கப்படாமையால் மீளாய்வாண்டின் வியாபார மற்றும் ஏனைய கடன்பட்டோர் மீதிகளின் சரியான தன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை. | கணக்காய்வு அறிக்கையுடன் இணங்குவதுடன், 2025 கணக்கு ஆண்டுகளுடன் எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்ட முறையை பயன்படுத்தி குறிப்பிட்ட கணித்தல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் படி சேதமடைதல் சரியாக கணிக்கப்படல் வேண்டும். |

### 1.5.1.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் வியாபார கடன் கொடுத்தோர் மீதியில் ரூபா 10,505,472 தொகையும் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதியில் ரூபா 1,766,891 தொகையுமாக வரவு மீதிகள் காணப்படல் மற்றும் வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகளில் ரூபா 1,188,619 இற்கான செலவு மீதிகள் காணப்பட்ட போதிலும், குறிப்பிட்ட மீதிகளை இனங்கண்டு தேவையான சீராக்கல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் காரணமாக மொத்த வியாபார கடன்கொடுத்தோர் மற்றும் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகள் மற்றும் வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகள் அந்தப் பெறுமதியினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு அறிக்கையுடன் இணங்குகின்றேன். பண்ணை கணக்கு தயாரிக்கும் போது கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் மீதிகளில் மறை மீதிகள் உட்படுத்தப்பட்டிருந்தமையால் சபையின் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது இது நேரிட்டிருந்தது. | இந்த வரவு மற்றும் செலவு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் படி மகாபேரியதன்ன, மிரிஸ்வத்த, ஹொரகெலே மற்றும் வெலிசர ஆகிய பண்ணைகளின் 61 இருப்பு விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 530,751 இற்கான இருப்புக் குறைவு வேறாக கணக்கீடு செய்யாமல் விற்பனவுக் கிரயத்திற்கு சீராக்கல் மேற்கொண்டு காட்டப்பட்டிருந்தது. | இந்த இருப்புக் குறைவினை இனங்கண்ட பின்னர் பௌதீக இருப்பை கணித்து அந்தப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உட்படுத்துவதன் மூலம் குறிப்பிட்ட இருப்புக் குறைவுக்காக சீராக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | இருப்புக் குறைவுகள் வேறாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | சபையின் மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கின் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 50,182,762 இற்கான மேலதிக பற்று மீதிக்காக பிணை வைக்கப்பட்டிருந்த நிலையான வைப்புக்கள் தொடர்பாக சபையின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்டுத்தியிருக்கவில்லை. | கணக்காய்வு அறிக்கையுடன் இணங்கப்படுகின்றது. சரி செய்தல் 2024 ஆண்டின் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன். | வங்கி மேலதிக பற்றின் மீதிக்காக பிணை வைத்தில் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் மூலதனத்தை தனதாக்கல் தொடர்பான காசு வெளிப்பாய்ச்சல் மற்றும் மூலதனம் அகற்றப்படல் தொடர்பான காசு உள்பாய்ச்சல் வெவ்வேறாக மூலதனத் தொழிற்பாடுகளின் கீழ் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் பண்ணை விலங்கு சபையின் மூலதன மாற்றங்கள் என ரூபா 208,168,887 தொகை காட்டப்பட்டிருந்தது. | தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் மிருகங்கள் விற்பனையின் மூலம் கிடைக்கக்கூடிய வருமானம் செயற்பாட்டு அலுவல்கள் மூலம் உருவாக்கப்படுகின்ற வருமானம் ஒன்றாக காணப்படுகின்றமையால் அதனை வரிக்கு முன்னர் இலாபத்தில் உள்ளடக்கப்பட்டது. | மூதலீட்டுத் தொழிற்பாடுகளின் கீழ் காசுஉள்பாய்ச்சல் மற்றும் காசுவெளிப்பாச்சல் வெவ்வேறாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | சபையின் காசுப்பாய்ச்சல் கூற்றின் பயிச் செய்கைகளுக்காக முதலீடு செய்யப்பட்ட தொகை ரூபா 99,424,993 தொகை எனினும், குறிப்பு இலக்கம் 11 இன் கீழ் பயிர்ச் செய்கைக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு ரூபா 96,976,444 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 2,448,549 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | இந்த வித்தியாசத்திற்கான காரணம் இலங்கை கோழி வளர்ப்பு அபிவிருத்தி தனியார் கம்பனியில் இருந்து 2022 ஆண்டின் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு வழங்கியிருந்த ரூபா 2,235,784 தொகை பெறுமதியான தென்னை பயிர்ச்செய்கை மற்றும் ரூபா 212,765 தொகை பெறுமதியான கருவா பயிர்ச்செய்கை முதலீடாகும். | காசு வெளிப்பாய்ச்சல் சரியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | சபையின் வருடாந்த பணிக்கொடை ஒதுக்கம் ரூபா 15,856,618 தொகை எனினும், காசுப்பாய்ச்சல் கூற்றில் வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா 17,109,443 தொகை சீராக்கல் | கணக்காய்வு அறிக்கையுடன் இணங்குகின்றேன். | பணிக்கொடை ஒதுக்கம் சரியாக காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்கல் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொண்டு காரணத்தினால் ரூபா 1,252,825 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | | |
| (எ) | சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணையின் படி சபையினால் 2022 ஆண்டு செலுத்தப்பட்டிருந்த ரூபா 22,816,374 இற்கான ஊழியர் பணிக்கொடைக் கொடுப்பனவு செயற்பாட்டுத் தொழிற்பாடுகளின் கீழ் காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் அதனை ரூபா 8,936,846 தொகை என காசுப்பாய்ச்சல் கூற்றின் செயற்பாட்டுத் தொழிற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | 2022 ஆண்டின் போது பணிக்கொடை என ரூபா 22,816,374 தொகை பணமாக செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்தத் தொகையில் ரூபா 13,879,528 தொகை 2021 ஆண்டிற்காக செலுத்த வேண்டிய பணிக்கொடைத் தொகையாகும். அந்த செலுத்த வேண்டிய பணிக்கொடைத் தொகை நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தமையால், 2022 ஆண்டில் அதற்காக செலுத்தப்பட்ட கொடுப்பனவு அதன் கீழ் காட்டப்பட்டுள்ளது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு வெளிப்பாய்ச்சல் சரியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | சபையின் காசுப்பாய்ச்சல் கூற்றில் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்திற்கு ரூபா 13,434,424 தொகைக்கான பொருளாதார சேவைக் கட்டணம் பதிவழித்தல் செலவு கூட்டியிருக்கவில்லை. | கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்தை ஏற்றுக்கொள்வதுடன், தற்போது அது வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டியவையின் கீழ் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பொருளாதார சேவைக் கட்டணம் பதிவழித்தல் சரியாக காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்கல் மேற்கொள்ள வேண்டும். |
| (ஐ) | கடந்த ஆண்டு பொலன்னறுவை பண்ணையில் எக்ஸலேட்டர் இயந்திரத்திற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 1,343,518 தொகைக்கான வாடகைச் செலவு சொத்துக்கு வரவு வைத்தலை சரி செய்யும் போது முன்னைய ஆண்டிற்கான இலாபத்திற்கு சீராக்கல் மேற்கொள்ளாமல் மீளாய்வாண்டின் செலவு ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வு அறிக்கையுடன் இனங்குகின்றேன். 2023 ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் உரிய சித்தரித்துக்காட்டல் மூலம் சரி செய்யப்பட்டுள்ளது. | முன்னைய ஆண்டின் வழுக்கல் சரி செய்தல் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிக்கு சீராக்கல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஒ) | நிலையான சொத்துப் பதிவேட்டில் கட்டிடங்களின் மீதியில் அடங்கியுள்ள 2004 ஆண்டின் மூலதனப்படுத்தப்பட்ட வெலிசர பண்ணையின் கீழ் காணப்பட்ட ரூபா 7,166,956 கிரயத்திற்கான (Managers Bungalow No.12) மீளாய்வாண்டளவில் 18 வருடங்கள் வரை பெறுமானத் தேய்வு கழிக்க வேண்டியிருந்த போதிலும், 2022 திசெம்பர் 31 திகதியில் | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் கட்டிடங்களின் மீதியில் அடங்கியிருந்த வெலிசர பண்ணையின் Managers Bungalow பெறுமதி 2012 ஆண்டு வரை ரூபா 289,127.43 தொகையாக காட்டப்பட்டதுடன், அது 2012 ஆண்டு ஜூன் மாதம் 30 திகதி மேற்கொள்ளப்பட்ட திருத்த வேலைச் செலவாகிய | பெறுமானத் தேய்வு சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளவாறு அண்ணளவாக 11 வருடங்களுக்காக மாத்திரம் பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. அதன்படி, கட்டிடங்களின் மீதி ரூபா 2,275,184 தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | ரூபா 6,877,828 தொகை 2012 ஜூன் 30 திகதியில் உள்ளவாறு நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் மூலதனப்படுத்தப்பட்டமையால் கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடங்களின் மீதி ரூபா 2,275,184 தொகை மிகையாக காட்டப்படவில்லை என அறிவிக்கின்றேன். | |
| (ஓ) | 2021 ஆண்டின் போது ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கிரயத்தினை மிகைத்து பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்தமையால் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 05 ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரண விடயங்கள் தேறிய மீதியில் ரூபா 2,156,386 இற்கான மறைப் பெறுமதி காணப்பட்டதுடன், அதன் காரணமாக மீளாய்வாண்டின் வருடாந்த பெறுமானத் தேய்வு ரூபா 2,156,386 தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு அறிக்கையுடன் இணங்குகின்றேன். தேவையான சரி செய்தல்கள் 2023 ஆண்டில் கணக்குகள் சமர்ப்பிக்கும் போது சரி செய்யப்பட்டுள்ளது. | ஆண்டிற்குரிய பெறுமானத் தேய்வு சரியாக கணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஔ) | ஏனைய பயிர்ச் செய்கைகளின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 2,379,113 தொகை பெறுமதியான தாவரங்களுக்கான நியாயமான பெறுமதி அறிக்கை (Plantation Valuation Report) பண்ணையின் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால், ஒவ்வொரு பண்ணைகளுக்கும் உரித்தான நுகர்வு இனவிருத்தித் தாவரங்களின் பெறுமதியை உறுதிப்படுத்தியிருக்கவில்லை. | கணக்காய்வு அறிக்கையுடன் இணங்குகின்றேன். தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை பயிர்கள் கிரயத்தின் மீது கணக்கீடு செய்யப்படுவதுடன், நியாயமான பெறுமதிக்கு பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்படாதமையால் அதனை கணக்காய்விற்கு வழங்குவதற்கு முடியாமல் இருந்தது. | சொத்துக்களை மதிப்பீடு செய்யும் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (க) | நுகர்வு இனவிருத்திச் சொத்துக்கள் தொடர்பான அட்டவணையின் படி 2013 ஆண்டில் ஆரம்பத்தில் காணப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 133,818,590 தொகை ஆரம்ப தாவரங்களின் பெறுமதி பண்ணைகள் ரீதியாக வெவ்வேறாக காட்டப்பட்டிருக்காததுடன், அந்த மீதியில் அடங்கியுள்ள தாவரங்களின் பெறுமதியை உறுதிப்படுத்த முடியாமல் உள்ளது. | ஒவ்வொரு பண்ணையிலும் மரங்களின் பெறுமதி தொடர்பான விபரங்கள் 2013 ஆண்டிற்கு முன்னர் காணப்படாத போதிலும், 2014 ஆண்டின் பின்னர் இந்தப் பதிவேடு தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு வருகின்றது. | கணிப்பீடொன்று மேற்கொண்டு ஒவ்வொரு பண்ணையிலும் காணப்படுகின்ற தாவரங்கள் தொடர்பாக சரியான பதிவேடொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (கா) | பண்ணையின் நிதிக்கூற்றுக்களின் படி சபைக்குச் சொந்தமான 04 பண்ணைகள் தொடர்பான கூட்டுத்தொகை ரூபா 2,203,360 தொகை பெறுமதியான புற்பயிர்செய்கை மீதி கம்பனி நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,328,079 தொகை என ஏனைய பயிர்ச் செய்கையின் கீழ் இனங்காணப்பட்டிருந்த காரணத்தினால் ரூபா 875,281 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | மஹபேரியதென்ன பண்ணையில் ரூபா 74,402 இற்கான புற்களிற்கான செலவு வித்தியாசம் காணப்படுகின்றதென ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், ஏனைய மீதிகள் சபையின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது தரவுகள் சித்தரித்துக் காட்டும் போது ஏற்பட்டிருந்த வழுக்களாகும். | இனவிருத்திச் சொத்துக்கள் சரியாக நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (கி) | சபியின் நிதிக்கூற்றுக்களின் படி தென்னைப் பயிர்ச்செய்கை மற்றும் புற்பயிர்ச் செய்கைக்காக காலத் தேய்மானம் ரூபா 4,276,185 தொகை மற்றும் ரூபா 3,937,547 தொகை எனினும், சபைக்குச் சொந்தமான அந்த தாவரங்களின் ஆயுட்காலம் கண்ககாய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் ஒவ்வொரு பயிர்ச்செய்கை தொடர்பாகவும் காலத் தேய்மானப் பெறுமதியின் சரியான தன்மையினை உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது. | சபைக்கு தென்னந் தோப்புக்கள் உரித்தாக்கிய சந்தர்ப்பம் முதல் தென்னை பயிர்களின் ஆயுட்காலம் அறிவிக்கப்படாமையால் இந்த சிக்கல் ஏற்பட்டிருந்தது. | ஆயுட் காலத்தை கணித்து ஆண்டிற்கான பெறுமானத் தேய்வை சரியாக கணிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (கீ) | தென்னை பயிர்ச் செய்கையொன்றின் மூலம் 07 வருடங்களில் நலன்கள் பெற்றுக்கொள்ள ஆரம்பிப்படுகின்றதென நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருந்த போதிலும், அட்டவணையின் படி 2015 ஆண்டு முதிர்வடைந்த தாவரங்கள் என இனங்காணப்பட்டிருந்த ரூபா 3,484,071 தொகைக்கான தென்னை பயிர்ச் செய்கைக்காக மீளாய்வாண்டின் போது காலத் தேய்மானம் இனங்காணாமல் | தென்னை பயிர்ச் செய்கை தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய காலத் தேய்மானங்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரை ஆக்கப்பட்டு வருவதுடன், அதன்படி எதிர் காலத்தில் இந்தத் தவறு சரி செய்யப்படும். | காலத் தேய்மானம் சரியான கணிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முன்னைய ஆண்டின் போது ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 4,276,185 இற்கான பெறுமதியையே மீளாய்வாண்டிற்காகவும் ஒதுக்கப்பட்டிருந்தது. | | |
| (கு) | சபையின் நிதிக்கூற்றுக்களில் இனவிருத்திச் சொத்துக்கள் (மிருகங்கள்) பெறுமதி காட்டும் போது வருட இறுதியில் அனைத்து காரணிகளையும் கவனத்தில் எடுத்து நியாயமான பெறுமதிக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், அந்த மிருகங்களின் வருட இறுதியில் உள்ளவாறு பெறுமதியில் தேறப்படாமை நிகழக்கூடிய நிலைக்காக மீண்டும் 10 சதவீத எண்ணிக்கையொன்று எனப்படும் ரூபா 145,432,621 தொகை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 41 இன் படி மிருகங்கள் நியாயமான பெறுமதிக்கு ஐந்தொகை திகதியில் உள்ளவாறு மதிப்பீடு செய்த பின்னர் மொத்த மிருகங்களின் எண்ணிக்கையும் கணக்கீட்டு காலப் பகுதியின் பின்னர் தேறப்படாமல் இருப்பதற்கான இயலுமை காணப்பட்டது. அது மொத்தப் பெறுமதியில் 10% என கணக்கீட்டுக் கொள்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் படி இனவிருத்திச் சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (கூ) | போபத்தலாவ பண்ணையில் 172 பசு மாடுகளை மதிப்பீடு செய்யும் போது அந்த மிருகங்களின் பெறுமதி நிறுவனத்தில் மிருகங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யும் செய்முறைக்கு முரணாக நாளாந்தம் சராசரி பால் உற்பத்தி 10 லீற்றர் என கணித்து ரூபா 16,643,502 தொகை என கணிக்கப்பட்டிருந்தது. பசுக்களின் உண்மையான பால் உற்பத்திக்கு பதிலாக அவ்வாறு சராசரி பெறுமதியை காட்டுதல் பிழையாக காணப்படுவதனால், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மிருகங்களின் பெறுமதியில் மிகை அல்லது குறை கணித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தவறு ஏற்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வதுடன், அடுத்த நிதியாண்டு முதல் சரி செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | மிருகங்களின் பெறுமதி சரியாக கணிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (கெ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான ரூபா 5,946,213,874 இற்கான மொத்தச் சொத்துக்களும் ரூபா 1,176,325,794 இற்கான மொத்தப் பொறுப்புக்களும் ரூபா 4,769,888,080 இற்கான உரிமை மீதியும் காணப்பட்டதுடன், கணக்காய்விற்காக நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது ஒவ்வொரு பண்ணைகளிலும் பரீட்சை மீதிகள் வெவ்வேறாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், தொகுதிக்காக ஒன்றித்த பரீட்சை மீதியொன்று சமர்ப்பித்திருக்கவில்லை. | 2025 நிதியாண்டு முதல் ஒன்றித்த பரீட்சை மீதிகள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | தொகுதிக்காக ஒன்றித்த பரீட்சை மீதியொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

#### 1.5.1.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | போபத்தலாவ பண்ணையில் ஏனைய பெறவேண்டிய மீதிகள் ரூபா 13,633,311 தொகை எனினும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணையின் படி மீதி ரூபா 16,966,645 தொகையாக காணப்பட்டமையால் மீதிகளிடையே ரூபா 3,333,334 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்ட போதிலும், வித்தியாசத்திற்கான காரணம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வித்தியாசம் ஒன்று காணப்படவில்லை என அறிவிக்கின்றேன். | அட்டவணைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களின் மீதிகள் சரியாக பேணிச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபையின் ஏனைய நடைமுறைச் சொத்துக்களின் மீதி ரூபா 67,985,683 தொகை எனினும், தலைமை அலுவலகம் மற்றும் பண்ணை என வெவ்வேறாக சமர்ப்பித்திருந்த நிதிக்கூற்றுக்களின் படி ஏனைய நடைமுறைச் சொத்துக்களின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 77,582,060 தொகையாக காணப்பட்டமையால் மீதிகளிடையே ரூபா 9,596,377 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்ட போதிலும், குறிப்பிட்ட வித்தியாசத்திற்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நடைமுறை கணக்கு மீதி ஏனைய நடைமுறைச் சொத்துகளின் கீழ் காட்டப்பட்டிருத்தல் மற்றும் சபையின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது அவை பண்ணைகளின் நடைமுறைக் கணக்கின் கீழ் காட்டப்பட்டிருந்தமையால் இந்த வித்தியாசம் ஏற்பட்டிருந்தது. | பண்ணைகளின் நடைமுறைக் கணக்கு மீதி மற்றும் தலைமை அலுவலகத்தின் மீதிகள் சரியாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | சபையின் நிதிக்கூற்றுக்களின் படி இலங்கை கோழி வளர்ப்பு அபிவிருத்தி தனியார் கம்பனியிலிருந்து பெற வேண்டிய பெறுமதி ரூபா 4,218,655 தொகை எனினும், அந்தக் கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் படி செலுத்த வேண்டிய மீதி என ரூபா 1,466,557 தொகை காட்டப்பட்டிருந்தமையால் மீதிகளிடையே ரூபா 2,752,098 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்ட போதிலும், குறிப்பிட்ட வித்தியாசத்திற்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இரண்டு கம்பனிகளிடையே கொடுக்கல் வாங்கல்களில் ஏற்பட்டிருந்த இணக்கமின்மை மீது இந்த வித்தியாசம் உருவாகியிருந்தது. | இந்த வித்தியாசத்தை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | சபையின் நிதி நிலைமைக்கூற்றில் நடைமுறைச் சொத்துக்களினுள் வியாபார இனவிருத்திச் சொத்துக்கள் | சில பண்ணைகளினால் இனவிருத்திச் சொத்துக்களின் பெறுமதி வியாபார இனவிருத்திச் | நேரோத்த அறிக்கைகள் சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க |

| | | |
|---|---|---|
| மீதி ரூபா 83,472,206 தொகை எனினும், தலைமை அலுவலகம் மற்றும் பண்ணைகள் என வெவ்வேறாக சமர்ப்பித்திருந்த நிதிக்கூற்றுக்களின் படி வியாபார இனவிருத்திச் சொத்துக்கள் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 109,656,480 தொகையாக காணப்பட்டமையால், ரூபா 26,184,274 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | சொத்துக்களின் கீழும், சில பண்ணைகளில் மூலதன இனவிருத்திச் சொத்துக்களின் கீழும் சித்தரித்துக் காட்டப்படுகின்றது. | வேண்டும். |

**1.5.1.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கந்தளாய் பண்ணை தொடர்பாக சபையில் காணப்படுகின்ற ரூபா 885,470 இற்கான சேமிப்பு வங்கிக் கணக்கின் மீதியை உறுதிப்படுத்துவதற்காக குறிப்பிட்ட வங்கிப் புத்தகம் அல்லது வங்கி மீதியை உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | இது தொடர்பாக கந்தளாய் வங்கிக்கு எழுத்துமூலம் வேண்டப்பட்டுள்ளது. | சேமிப்பு வங்கிக் கணக்கு மீதியை உறுதிப்படுத்துவதற்காக குறிப்பிட்ட வங்கிப் புத்தகம் அல்லது வங்கி மீதிகளை உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தலைமை அலுவலகம் வெலிசர பால் செயற்திட்டம் மற்றும் பண்ணைகளில் காணப்படுகின்ற கூட்டுத்தொகை ரூபா 33,573,949 தொகைக்கான 31 வியாபார மற்றும் ஏனைய கடன்கொடுத்தோர் மீதிகளுக்காக மீதிகளை உறுதிப்படுத்தல்கள் கணக்காய்வினால் அனுப்பப்பட்டிருந்த போதிலும் அந்த மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். தலைமை அலுவலகம் மற்றும் வெலிசர பால் திட்டத்தின் முன்னைய ஆண்டுகளின் போதும் கடன் கொடுத்தோர் மீதிகளை உறுதிப்படுத்திக்கொள்தவற்காக மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் அனுப்பப்பட்ட போதிலும், அவற்றிற்கு பதில் கிடைத்திருக்கவில்லை. | மீதிகளை உறுதிப்படுத்தல்கள் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தயகம பண்ணையில் ரூபா 2,411,823 தொகைக்கான வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளின் மீதி மற்றும் வெலிசர பண்ணையின் ரூபா 17,087,169 தொகைக்கான கடன்கொடுத்தோர் மீதிகளை, மீதிகளின் அட்டவணைகள் மற்றும் காலப் பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட தகவல்கள் இத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றது. | மீதிகளை உறுதிப்படுத்தல்கள் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளில் அடங்கியிருந்த | டெண்டர் வைப்பு மீதிக்குரிய ஆவணங்கள் இத்துடன் | அட்டவணைகள் அல்லது அதற்குரிய சான்றுகள் |

| | | | |
|---|---|---|---|
| | 03 பண்ணைகளின் கூட்டுத்தொகை ரூபா 8,332,629 தொகைக்கான டென்டர் வைப்புக்களுக்காக அட்டவணைகள் அல்லது அதற்குரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | வெலிசர பால் செயற்திட்டத்தின் மற்றும் பண்ணைகள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 10,857,281 தொகை 19 வியாபார மற்றும் ஏனைய கடன்பட்டோர் மீதிகளுக்காக வெளி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | 2024 ஆண்டு முதல் அனைத்து கடன்பட்டோர் மீதிகளுக்குமாக மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | அட்டவணைகள் அல்லது அதற்குரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2013 ஆண்டிற்கு முன்னர் இருந்து நிதிக்கூற்றுக்களில் ஏனைய நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 16,566,783 இற்கான பிற்போடப்பட்ட செலவு மீதிகள் தொடர்பாக சான்றுகள் ஏதும் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | இந்த செலவினை பரிசோதனை செய்து ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | தகவல்களை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 வ/ப இலங்கை கோழி வளர்ப்பு அபிவிருத்தி தனியார் கம்பனி

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் பந்தி 25 இன் பிரகாரம் கம்பனியினால் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது தொடர்ந்தியங்குதல் தொடர்பாக மதிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அவ்வாறு தொடர்ந்தியங்குதல் காணப்படாமைக்கான சம்பவங்கள் மற்றும் நிலைமைகள் காணப்படின் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், 2020 ஜூன் 10 திகதி அமப/20/0890/217/052 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் படி கம்பனி தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் பண்ணையொன்றாக நடாத்திச் செல்வதற்கு தீர்மானம் எடுத்திருந்த போதிலும், மற்றும் ஒழித்தல் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த பின்னணி 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக | வரையறுக்கப்பட்ட இலங்கை கோழி வளர்ப்பு அபிவிருத்தி (தனியார்) கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 2.1.2 இன் கீழ் கம்பனி தொடர்ந்தியங்குகின்றது என காட்டப்பட்டுள்ள பந்தியை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், 2023 ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்கள் ஒழித்தல் அடிப்படையில் தயாரிப்பதற்கு மற்றும் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது முகாமைத்துவத்தினால் தொடர்ந்தியங்குதல் தொடர்பாக மதிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெளிப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது ஒழித்தலின் அடிப்படை (Liquidation Basis) மீது நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் மேற்றகொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், தொடர்ந்தியங்கும் தன்மையின் கீழ் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 10 இன் பந்தி 17 இன் படி நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட திகதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், கம்பனியினால் நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட திகதியை அவ்வாறு வெளிப்படுத்தியிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்கள் தயாரித்து அங்கீகாரம் பெற்று சமர்ப்பிப்பதற்காக கம்பனிக்கு பணிப்பாளர் சபையொன்று நியமனம் செய்யப்பட்டிருக்காமையால், விவசாய, பண்ணை விலங்கு, காணிகள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சுச் செயலாளரின் அங்கீரத்துடன் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் படி நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பந்தி 51 இன் பிரகாரம் நிதியல்லாத சொத்துகளுக்காக ஆக்கபூர்வமான ஆயுட் காலம் வருடாந்தம் முகாமைத்துவத்தினால் மீளாய்வு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் மேற்கொள்ளப்படாமையால் ரூபா 40,241,059 தொகை கிரயத்தையுடைய தொகைக்கான முழுமையான பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்ட ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும், குறிப்பிட்ட சொத்துக்கள் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் தேவையான சீராக்கல் மேற்கொண்டிருக்கவில்லை. | கம்பனியின் ஒழித்தல் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தமையால் எதிர்காலத்தில் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் தேவையான சீராக்கல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) | கொழும்பு பான்ஸ் இடத்தில் அமைந்துள்ள ரூபா 22,500,000 தொகை பெறுமதியான கட்டிடத்தின் கிரயம் நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்ட போதிலும், அதற்குரிய வருடாந்த பெறுமானத் தேய்வு ரூபா 1,125,000 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் அந்த வீட்டின் பெறுமதியை இனங்காண்பதற்காக மீள்மதிப்பீடு மேற்கொண்டு இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் தேவையான சீராக்கல் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன். | சொத்துக்களுக்காக வருடாந்த பெறுமானத் தேய்வு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வியாபாரம் மற்றும் ஏனைய பெற வேண்டியவைகளின் மீதி ரூபா 6,610,335 தொகையாக காணப்பட்டதுடன், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த கடன்பட்டோர் காலப் பகுப்பாய்வின் படி அவற்றில் 05 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 5,274,879 தொகையும், 10 வருடங்களை மிகைத்துள்ள மீதி ரூபா 1,335,456 தொகையும் காணப்பட்டது. மீளாய்வாண்டு இறுதியளவிலும் கூட்டுத்தொகை ரூபா 7,945,791 தொகை மீதிகளை அறவீடு செய்தல் நிச்சயமற்ற தன்மையொன்று காணப்பட்ட போதிலும், அந்த மீதிகளுக்காக இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 09 இன் பந்தி 5.5.15 இன் படி சேதப்படுத்தல் சீராக்கல் மேற்கொண்டிருக்கவில்லை. | இந்த மீதிக்காக இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 09 பந்தி 5.5.15 இன் படி சேதப்படுத்தல் சீராக்கல் கம்பனியின் ஒழிப்பாளரின் அறிவுரையின் படி மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிச்சயமற்ற நிலைமையில் காணப்படுகின்ற கடன்பட்டோர் மீதிகளுக்காக இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் படி சேதப்படுத்தல் சீராக்கல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் நிதிக்கூற்றுக்களில் படி வரையறுக்கப்பட்ட கோழி வளர்ப்பு அபிவிருத்தி தனியார் கம்பனியில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 4,218,655 இற்கான மீதியொன்று காட்டப்பட்ட போதிலும், கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் சபைக்கு செலுத்த வேண்டிய மீதி என ரூபா 3,108,595 தொகை மாத்திரம் காட்டப்பட்டிருந்தமையால், ரூபா 1,110,060 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்ட போதிலும், அது தொடர்பாக கண்டறிந்து தீர்த்திருக்கவில்லை. | 2022 ஆண்டு முதல் வரையறுக்கப்பட்ட கோழி வளர்ப்பு அபிவிருத்தி தனியார் கம்பனி சபையின் பண்ணையொன்றாக செயற்படுவதுடன், அதன் மூலம் ஏற்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் நடைமுறைக் கணக்கொன்றின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. வரையறுக்கப்பட்ட கோழி வளர்ப்பு அபிவிருத்தி தனியார் கம்பனியின் ஒழித்தல் செய்முறைகளின் போது தேவையான இணக்கங்கள் மேற்கொண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | மீதிகளிடையே காணப்படுகின்ற வித்தியாசங்களை இனங்கண்டு தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ள வேண்டும். |
| (எ) | கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையிலிருந்து பெற வேண்டிய மீதி என கூட்டுத்தொகை ரூபா 3,356,129 தொகை என காட்டப்பட்டிருந்த போதிலும், சபையின் நிதிக்கூற்றுக்களின் படி கம்பனிக்கு செலுத்த வேண்டியவை என எதுவித பெறுமதியொன்றும் காட்டியிருக்காத போதிலும், தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அந்தப் பணம் இதுவரை கிடைத்திருக்காததுடன் கம்பனியின் ஒழித்தல் செய்முறை மூலம் தீர்த்துக்கொள்வதற்கு முடியுமாகும். | சபையிலிருந்து கிடைக்க வேண்டிய மீதிகளை தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களின் படி ரூபா 28,288,290 தொகைக்கான ஊழியர் கடன்பட்டோர் கணக்கில் அடங்கியுள்ள ரூபா 1,541,111 தொகைக்கான 05 வருடங்களை மிகைத்துள்ள மீதிகளை மீளாய்வாண்டு இறுதியளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை. | இந்த கடன்பட்டோர் மீதிகளை அறவீடு செய்வதற்கு அல்லது தகவல்கள் கண்டறிய முடியாத மீதிகளை ஏடுகளில் இருந்து பதிவழிப்பதற்கு தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நிலுவை கடன்மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களின் படி ரூபா 193,335,673 தொகைக்கான வியாபார மற்றும் ஏனைய கடன்பட்டோர் மீதிகளில் அடங்கியுள்ள ரூபா 75,189,109 தொகைக்கான 05 வருடங்களை மிகைத்துள்ள மீதிகள் மீளாய்வாண்டு இறுதியளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை. மேலும், ரூபா 50,592,451 தொகைக்கான 05 வருடங்களை மிகைத்துள்ள தலைமை அலுவலகத்தின் வியாபார மற்றும் ஏனைய கடன்பட்டோர் மீதியில் அடங்கியுள்ள ரூபா 47,383,352 இற்கான மீதி 2024 ஆண்டிறுதி வரை அறவீடு செய்திருக்காததுடன், 2022 திசெம்பர் 31 திகதி அளவிலும் கூட்டுத்தொகை ரூபா 17,768,743 இற்கான 05 கடன்பட்டோர் மீதிகள் சட்ட நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ள போதிலும், அதன் மூலம் 2024 திசெம்பர் 31 திகதி அளவிலும், எதுவித கடன்பட்டோர் மீதியும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | கடன்பட்டோர் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | நிதிக்கூற்றுக்களின் படி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து பெற வேண்டிய வருமான வரி மற்றும் தடுத்து வைத்தல் வரி கூட்டுத்தொகை ரூபா 2,257,460 தொகை மற்றும் ரூபா 9,020,139 தொகைக்கான பெற வேண்டிய பெறுமதி கூட்டிய வரி தொடர்பாக எதுவித நடவடிக்கைகளும் மீளாய்வாண்டு இறுதியளவிலும் எடுத்திருக்கவில்லை. | இந்த மீதி பல வருட காலம் முதல் காணப்படுகின்ற மீதியாக காணப்படுவதுடன், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் காணப்படுகின்ற மீதிகளுடன் இணக்கஞ் செய்து எதிர் காலத்தில் சரி செய்வேன். | இந்த மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | ரொஷிடா பண்ணையில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிந்த | இது தொடர்பாக அமைச்சின் கணக்காய்வு மற்றும் குழுவின் | நிலுவைத் தொகையை அறவீடு செய்ய |

| | | |
|---|---|---|
| 2014 ஆண்டு முதல் காணப்படுகின்ற விவசாய அமைச்சிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 1,460,561 தொகைக்கான எரிபொருள் பில் பத்திரங்கள் இதுவரை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மூலம் விதிக்கப்பட்ட விசாரணை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்தக் குழுவினால் வழங்கப்படுகின்ற பரிந்துரைகளின் படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் நிதி நிலைமைக்கூற்றில் நடைமுறை பொறுப்புக்களின் கீழ் காணப்படும் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளின் கீழுள்ள வியாபார கடன்கொடுத்தோர் மீதிகளின் காலப் பகுப்பாய்வின் படி 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் முதல் காணப்படுகின்ற கூட்டுத்தொகை ரூபா 132,942,034 தொகை மற்றும் 05 வருடங்களை விட மிகையான காலம் முதல் காணப்படுகின்ற கூட்டுத்தொகை ரூபா 57,227,417 தொகை கடன்மீதிகள் காணப்பட்டன. | இந்த கடன்கொடுத்தோர் மீதிகள் பகுதிகளாக தீர்த்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1972 இன் 11 ஆம் இலக்க அரச விவசாய சட்டத்தின் பிரிவு 02 மற்றும் 1975 பெப்ரவரி 14 திகதிய 157 ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானி | மகபேரியதென்னவில் அமைந்துள்ள 517 பர்சஸ் காணி மற்றும் வெலிசரவில் அமைந்துள்ள 31 பர்சஸ் காணி முறையே ரூபா 29,418,300 இற்கான வாக்குறுதியொன்றிற்காக 99 வருடங்கள் வரை மற்றும் ரூபா 31,600,800 தொகையிற்காக இரண்டு தனியார் கம்பனிகளுக்கு சபையினால் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள நிறைவேற்றப்பட வேண்டிய கருமங்கள் அடங்காத அலுவல்களுக்காக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு குத்தகைக்கு | அமைச்சரவை அமப/ 1192/145(5) இலக்கம் கொண்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் படி மகபேரியதென்ன பண்ணையில் இருந்து 517 ஏக்கர்கள் 1996 ஆண்டு முதல் 99 வருடங்களுக்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு குத்தகை அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்தது. மேலும், முதலீட்டுச் சபை (BOI) இற்கு உரித்தான முதலீட்டு வசதிகள் வழங்குவதற்காக நியமனம் செய்யப்பட்ட அமைச்சரவை உப | சபைக்குச் சொந்தமான காணிகளை குத்தகைக்கு கொடுக்கும் போது சட்டம் மற்றும் வர்த்தமானியின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த திருத்தங்களின் படி சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய கருமங்களுக்குரிய அலுவல்களுக்காக வழங்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொடுக்கப்பட்டிருந்தது. | குழுவின் கூட்டத்தின் போது தனியார் கம்பனியொன்றிற்கு அலங்கார வடிவமைப்பு நிலையமொன்று நடாத்திச் செல்வதற்காக வெலிசர பண்ணைக் காணியில் 3 ஏக்கர் 0.31 பர்சஸ் (1.2152 ஹெக்டயர்கள்) வழங்குவதற்கு அப்போதைய ஜனாதிபதி தீர்மானித்திருந்தார். அதன்படி, 2006.09.05 திகதிய 374 ஆவது பணிப்பாளர் சபை தீர்மானத்தின் படி 30 வருடங்களுக்காக அந்த நிறுவனத்திற்கு உடன்படிக்கை ஒன்றின் கீழ் குத்தகை அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்தின் பிரிவு 5(1) | சேவையிலிருந்:து விலகி 30 நாட்களுக்குள் பணிக்கொடையினை செலுத்தி முடிவாக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2021 மற்றும் 2022 ஆண்டுகளின் போது சேவையிலிருந்து விலகியிருந்த 17 ஊழியர்களுக்கு மற்றும் 32 ஊழியர்களுக்கு முறையே ரூபா 1,020,938 தொகை மற்றும் ரூபா 5,246,568 தொகை செலுத்த வேண்டிக் காணப்பட்டது. | 2022 ஆண்டு அரை இறுதியில் சேவையை விட்டு விலகியிருந்த ஊழியர்களின் பணிக்கொடை இவ்வாறு செலுத்தப்பட வேண்டியவைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | சட்டத்தின் பிரகாரம் உரிய தினத்தில் பணிக்கொடை கொடுப்பனவு செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் செயற்பாட்டுக் கைநூல் மற்றும் வழிகாட்டலின் பிரிவு 6.6 | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2022 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2025 மார்ச் 12 திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட காலப் பகுதியினுள் நிதிக்கூற்றுக்கள் தயாரித்து பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், முன்னைய பல வருடங்களில் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு செய்திருக்காமையால் கணக்காய்விற்கு ஒப்படைக்க முடியாமல் இருந்தது. இந்த தாமதம் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் குறிப்பிட்ட நாட்களில் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இதற்கு பிரதான காரணமாக இருந்தது. | |

2. **நிதி மீளாய்வு**

2.1 **நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை மற்றும் அதன் நிருவாகத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 125,982,339 இற்கான இலாபமொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 173,420,993 தொகை ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 47,438,654 இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவிற்கு நிருவாகம் மற்றும் வினியோகம் மற்றும் ஏனைய செலவுகள் அதிகரித்தல் பிரதானமான காரணமாக இருந்தது.

2.2 **பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு**

மீளாய்வாண்டின் விற்பனை வருமானம் 13 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன், அதற்கு நேரொப்ப விற்பனைக் கிரயம் 33 சதவீத்தினால் அதிகரித்திருந்தது. இனவிருத்திச் சொத்துக்களின் நியாயமான பெறுமதி அதிகரித்தல் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 3770 சதவீதமாக காணப்பட்டது. கம்பனியின் மொத்த இலாப விகிதாசாரம் 03 சதவீதத்தினால் குறைந்திருந்ததுடன், ஏனைய வருமானங்கள் 98 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. மேலும், சபையின் வினியோகச் செலவு 36 சதவீதத்தினாலும், நிருவாகச் செலவு 14 சதவீதத்தினாலும் மற்றும் ஏனைய செலவுகள் 42 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது என அவதானிக்கப்பட்டது.

3. **செயற்பாட்டு மீளாய்வு**

3.1 **முகாமைதத்துவ திறமையின்மை**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | வெலிகந்த பண்ணையின் முகாமையாளரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 619,485 தொகைக்கான பணம் குறைந்தமை காணப்படல் மற்றும் ரூபா 10,287,510 தொகைக்கான இனவிருத்திச் சொத்துக்கள் குறைவுத் தன்மையொன்று என மொத்தம் ரூபா 10,906,995 தொகை காணப்பட்ட போதிலும், தற்போது அந்த நபர் உயிருடன் காணப்படாமையால் அந்த் தொகையை அறவீடு செய்யும் சாத்தியமொன்று காணப்படாததுடன், அது தொடர்பாக பொறுத்தமான நடவடிக்கையொன்று எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக மோசடி விசாரணை பிரிவினால் விசாரணை செய்யப்பட வேண்டியதுடன், பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் இதுவரை அறுதியாக இனங்காணப்படாமையால், தொடர் நடவடிக்கை எடுக்க முடியாமல் உள்ளது. மோசடி விசாரணைப் பிரிவின் பணிகள் முடிவடைந்த பின்னர் அதன் முடிவுகளின் படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரை இனங்கண்டு நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மிரிஸ்வத்த பண்ணையில் 2022 செப்தம்பர் 07 மற்றும் 08 திகதிகளில் 1726 இனப்பெருக்க கோழிகள் காணாமல் போயிருந்தமையால் ஏற்பட்டிருந்த | இது தொடர்பாக சபையினால் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டதுடன், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று | முறையான விசாரணையொன்று மேற்கொண்டு பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தரை |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 5,351,366 தொகைக்கான வளங்களின் குறைவு தொடர்பாக இதுவரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், நிகவரடிய விற்பனை நிலையத்தில் ரூபா 751,243 தொகை பெறுமதியான விற்பனை குறைவு தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விசாரிக்கப்பட்டு வருகின்றது. தேவையான அலுவல்கள் முடிவடைந்தவுடன், குறிப்பிட்ட நபர்களிடம் பணத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். | இனங்கண்டு நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மாரவில மற்றும் மிரிஸ்வத்த பண்ணைகளில் மற்றும் தலைமை அலுவலத்திற்குரிய கூட்டுத்தொகை ரூபா 30,191,157 தொகைக்கான வைப்பு மீதியில் 2020 ஆண்டு வரை கோழிக் குஞ்சுகளுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட விற்பனவு முற்பணம் மற்றும் 525 டென்டர் வைப்புக்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 14,203,784 இற்கான வைப்பு மீதிகளை தீர்ப்பதற்கு 2022 திசெம்பர் 31 திகதி அளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மாரவில மற்றும் மிரிஸ்வத்த பண்ணைகளில் பிணை வைப்பு வைத்துள்ள வாடிக்கையாளர்கள் தற்போதும் வைப்புச் செய்துள்ள பிணை வைப்புக்களின் பெறுமதி கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படும். | கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படாத பிணை வைப்புக்களை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்தின் மற்றும் மத்திய வங்கி வருடாந்த அறிக்கையின் படி 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது நாட்டின் ஒட்டுமொத்த பால் உற்பத்தி முறையே ரூபா 506,449,602 தொகை மற்றும் ரூபா 504,153,360 தொகையாக காணப்பட்டதுடன், தேங்காய் உற்பத்தி 3,391 மில்லியன் காய்கள் மற்றும் 3,170 மில்லியன் காய்களாக காணப்பட்டது. 2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்காக அவற்றில் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் பால் உற்பத்தி முறையே 7,602,151 லீற்றர் மற்றும் 5,552,862 லீற்றர்களாக காணப்பட்டதுடன், தேங்காய் உற்பத்தி 18 மில்லியன் மற்றும் 14 மில்லியன் தேங்காய்களாக காணப்பட்டது. அதன்படி, சபையின் | சபையின் பால் உற்பத்தியை நாட்டின் உற்பத்தியில் பாரிய சதவீதம் என அதிகரித்தல் நடைமுறைச் சாத்தியமற்றதாகும். அதாவது பால் உற்பத்தியை இரண்டு மடங்காக்கினாலும், அது நட்டின் உற்பத்தியின் 3.5 சதவீதமாகும். எவ்வாறாயினும், காணப்படுகின்ற வளங்களை உச்ச மட்டத்தில் பயன்படுத்தி வரையறுக்கப்பட்ட நிதி இயலுமையின் மீது கூடியவளவு உச்சமட்ட உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 2022 – 2023 ஆண்டுகளின் போது தென்னை பயிர்ச் செய்கைக்கு தாக்கத்தை ஏற்படுத்திய மைட்டா மற்றும் வெள்ளை ஈ சேதம், இரசாயன உரத் தட்டுப்பாடு காரணமாக தேங்காய் உற்பத்தி | உற்பத்திகளை மேலும் அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பங்களிப்பு 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது முறையே பால் உற்பத்தியில் 1.39 சதவீதம் மற்றும் 1.10 சதவீதமாக காணப்பட்டதுடன், தேங்காய் உற்பத்தியில் 0.52 சதவீதம் மற்றும் 0.44 சதவீதமாகிய குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. மேலும், பொதி செய்யப்பட்ட திரவப் பாலுக்காக சந்தையில் கூடிய கேள்விகள் காணப்பட்டதுடன், ஏனைய போட்டி நிறுவனங்கள் அந்தச் சந்தையின் தேவையை இனங்கண்டு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், நாட்டின் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை நாட்டின் பிரதான பால் உற்பத்தியாளராக காணப்பட்ட போதிலும், அவ்வாறான சந்தர்ப்பத்தை பயன்படுத்துவதன் மூலம தற்காலத்திற்கு பொருந்தக்கூடியவாறு நடவடிக்கை எடுத்து சந்தையின் பங்கினை அதிகரித்துக்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | குறைவடைந்தது. பொதி செய்யப்பட்ட திரவப் பாலுக்கு தேவையான பொதி செய்யும் பண்டங்கள் நாட்டில் நிலவிய இறக்குமதி வரையறையின் காரணமாக இறக்குமதி செய்வதற்கு முடியாமையினால் உற்பத்தி வரையறுக்கப்பட்டது. | |
| (ஆ) | தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு சொந்தமான 32 பண்ணைகள் காணப்படுகின்ற 11,379 ஹெக்டயர் ஒட்டுமொத்த காணியின் அளவில் 9,159 ஹெக்டயர்கள் பயன்படுத்தப்படுவதுடன், 2,220 ஹெக்டயர்கள் பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. இவ்வாறு பயன்படுத்தப்படாத காணிகளில் சேற்று நிலம் மற்றும் உள்ளக காட்டுப் பூமிகள், சுற்றாடல் உணர்வு இடங்கள், மலைகள் மற்றும் கற்களுடனான இடங்கள் காணப்பட்டதுடன். தொடர்ந்தும் அபிவிருத்தி செய்வதற்காக 1,606 ஹெக்டயர்களுக்கான காணிப் பகுதி பயன்படுத்தப்படாமல் காணப்படுகின்றதென அவதானிக்கப்பட்டது. | பயன்படுத்தப்படாமல் காணப்படுகின்ற காணிப் பகுதி சுமார் 1,606 ஹெக்டயர்கள் பகுதியொன்று முதலீடு செய்து அபிவிருத்தி செய்யும் மட்டத்தில் காணப்பட்டது. இந்தக் காணிகள் பல வருடங்களாக அபிவிருத்தி செய்ய முடியாமைக்கு முதலீட்டுக்கான நிதி சாத்தியங்கள் காணப்படாமை, உரிமை காணி ஆணையாளருக்கு காணப்படல், காட்டு யானைச் சிக்கல், நீர்ச் சிக்கல், பொருளாதார வீழ்ச்சி, 2022 ஆண்டு தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையை மற்றும் மில்கோ நிறுவனத்தை ஒன்றினைத்து தனியார் நிறுவனம் ஒன்று நிறுவுவதற்காக அமைச்சரவை தீர்மானம் ஒன்றின் படி புதிய செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படக்கூடாது என அறிவித்திருத்தல் ஆகிய காரணங்களினால் ஆகும். இதுவரை இந்த காணிகள் | பயன்படுத்தப்படாத காணிகளை அபிவிருத்தி செய்து பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மற்றும் பண்ணைகள் அபிவிருத்தி செய்வதற்கு சந்தர்ப்பம் ஒன்று கிடைக்கவில்லை. | |
| (இ) | சபைக்குச் சொந்தமாக காணப்படும் 32 பண்ணைகளில் 13 பண்ணைகள் 2022 ஆண்டு கூட்டுத்தொகை ரூபா 496,420,776 இற்கான நட்டமொன்று அடைந்திருந்தது. மேலும், ஆண்டின் போது நட்டம் விளைவித்திருந்த மெனிக்பாலம, ரிதியகம, பொலன்னறுவை, மாட்டின் மற்றும் எம்.எல்.டீ.சீ. ஆகிய 05 பண்ணைகள் அண்ணளவாக 05 வருட காலம் வரை தொடர்ச்சியாக கூட்டுத்தொகை ரூபா 1,585,584,049 இற்கான நட்டமொன்று அடைந்திருந்தது. மேற்கூறிய 05 பண்ணைகளின் கூட்டுத்தொகை 2,481 ஹெக்டயர் காணிகள் அளவு பயன்படுத்தப்பட்டிருந்தது.<br>பண்ணைகள் நீண்ட காலமாக நட்டமடைவதற்கு பலவீனமான செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவ திறமையின்மை தாக்கத்தை ஏற்படுத்தியிருந்ததென அவதானிக்கப்பட்டது. | ரிதியகம, மெனிக்பாலம மற்றும் பொலன்னறுவை பண்ணைகளின் மிருகங்களின் உணவுகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற உள்ளீட்டு விலை அதிகரித்தல், புற்கள் மாத்திரம் வழங்கப்படாமல் செறிவுட்டிய உணவு பாரியளவு வழங்குவதன் மூலம் உற்பத்திக் கிரயம் மிகவும் அதிகரிக்கின்றது. இந்த செயற்திட்டத்தை இலாபகரமாக ஆக்குவதற்காக பண்ணைகளில் உற்பத்தி செய்கின்ற பாலினை மொத்தமாக விற்பனை செய்யாமல் பெறுமதி கூட்டிய பால் என சந்தைக்கு வழங்கப்பட வேண்டும். எனினும், சபையின் பாலில் 10 சதவீத எண்ணிக்கையொன்று பெறுமதி கூட்டிய உற்பத்தி என விற்பனை செய்யப்படுவதனால் பாரியளவிலான பண்ணைகளை நட்டத்துடன் நடாத்துவதற்கு நேரிட்டிருந்தது. 2018 – 2022 காலப் பகுதியில் நாட்டில் நிலவிய நிலைமைகள் காரணமாக பண்ணைகள் உற்பத்தி மற்றும் மிருகங்களின் சரீர நிலைமை தீவிரமாக வீழ்ச்சியடைந்தது.<br>பொலன்னறுவை பண்ணைக்கு காணி வழங்கப்பட்டிருந்த போதிலும், பல்வேறு செயற்திட்டங்களுக்காக காணிகள் விடுவிக்கப்பட்டிருந்த காரணத்தினால் சபைக்கு சாட்டப்பட்டிருந்த காணிகளின் எண்ணிக்கையை தீர்த்துக்கொண்டு எதிர்காலத்தில் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மாட்டின் பண்ணையில் சந்தைக் கேள்வியின் படி தொடர்ச்சியாக இலாப நட்ட நிலைமைகள் மாற்றமடையும் பண்ணையொன்றாகும். | நட்டமடையும் நிலைமையிலுள்ள பண்ணைகளை இலாபகரத் தன்மைக்கு மாற்றுவதற்காக தற்போது காணப்படும் வளங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கும் மற்றும் செயற்திறனுடன் செயற்பாட்டு அலுவல்கள் மேற்கொள்ளல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

மிருகங்கள் இறத்தல், ஆக்கபூர்வ தன்மை குறைதல், இனவிருத்தி செய்முறை நிறுத்தப்படல், நுகர்வோர் கேள்வி குறைவடைதல் ஆகியவற்றின் மூலம் செயற்திட்டம் சிக்கலொன்றுக்கு உள்ளாகியது. எம்.எல்.டீ.சீ பண்ணை பயிற்சி நிலையமொன்றாக காணப்படுவதுடன், கொரோனா தொற்றுநோய் மற்றும் பிரயாணங்கள் வரையறுக்கப்படல் காரணத்தினால் அனேகமான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் இரத்துச் செய்யப்பட்ட காரணத்தினால் சபையின் செலவில் பராமரிக்க நேரிட்டதுடன், பின்னைய காலங்களில் இலாபகரத் தன்மையுடன் நடாத்தப்பட்டு வருகின்றது.